செ.வெ.எண்:456 நாள்:04.09.2019

# நாங்குநேரி அங்கன்வாடி மையத்தில் மரக்கன்றுகளை நட்டு மாணவ மாணவிகளிடம் மாவட்ட ஆட்சியர் கலந்துரையாடினார்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி பெரிய கோயிலின் அருகில் உள்ள அங்கன்வாடி மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப., அவர்கள்** ஆய்வு செய்து மைய வளாகத்தில் கொய்யா, மாதுளை மரக்கன்றுகளை நட்டு மரக்கன்றுகளை நடும் திட்டத்தினை இன்று (04.09.2019) தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது,

நீர்நிலைகளை பாதுகாத்திட தமிழக அரசு குடிமராமத்து பணிகளை போர்கால அடிப்படையில் மாநிலம் முழுவதும் செய்து கொண்டிருக்கிறது. இதனால் மழைக்காலங்களில் பெறப்படும் மழையினை எளிதாக சேகரிக்க முடியும் மழையினை எளிதாக பெறவும், பூமி வெப்ப மயமாதலை தடுக்கவும் அதிக அளவில் மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும் இதற்காக தமிழக அரசு ஏற்கனவே ஆண்டிற்கு 60 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணிகள் ஏற்கனவே நடைபெற்றது. மரக்கன்றுகள் வளர்ந்து வருகிறது. இதனை தொடர்ந்து அனைத்து பள்ளி, அங்கன்வாடி மையங்களில் தற்பொழுது மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. பொது மக்களிடம் இத்திட்டத்திற்கு உதவி வரும் வகையில் தங்களது பிறந்தநாள் மற்றும் பொது விழாக்களில் விழாவினை சிறப்பிக்கும் வகையில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கவும் திருமணம் போன்ற விழாக்களில் பங்கேற்க்கும் உறவினர்கள் நண்பர்களுக்கு மரக்கன்றுகளை அதிக அளவில் நட்டு வளர்த்திட உதவ வேண்டும். தங்களது பள்ளி வயது குழந்தைகளுக்கு மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் பழக்கத்தினை உருவாக்கிட வேண்டும்.என கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் போது காய்கறி சத்தான உணவுப்பொருட்கள் அடங்கிய சிறு கண்காட்சி அரங்கினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு குழந்தைகளுக்கு சத்தான உணவினை தொடர்ந்து வழங்கிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் போது பொதுப்பணித்துறை உபகோட்ட பொறியாளர் திரு.மதனசுதாகர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.செந்தில் அவர்களும் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.,**